லலித் அத்துலத் முதலி பி. பி. ஸிக்குப் பேட்டி

# எனதுகட்சி ஆட்சிக்குவரின் புலிகளுடன் யுத்தத்தைத் தவிர்த்துப் பேச்சு நடத்தும்

"தாம் ஆட்சிக்கு வந்தால் விடுதலைப் புலிகளுடன் சமாதான பேச்சுகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார். பி.பி. ஸி சிங்கள சேவைக்கு அவர் அளித்த பேட்டியில் புலிகளுடன் யுத்தம் புரிந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது சமாதானப் பேச்சின் மூலமே அமைதியை நிலைநாட்டமுடியும் எமது புதிய கட்சி பொதுத் தேர்தல் மூலம் ஆட்சிக்கு வந்தால் நிச்சயம் இக் கொள்கையையே கடைப்பிடிக்கும் எனக்குறிப்பிட்ட லலித் புதிய கட்சியை பலப்படுத்துவதில் தாம் தற்போது ஈடுபட்டுள்ளதாகவும், இதன் பொருட்டு நாளை சகல எதிர்க்கட்சியினரையும் அழைத்து மாநாடு ஒன்று நடாத்த திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார், விடுதலைப் புலிகளுடன் போரைத் தவிர்த்து பேச்சுநடாத்த

—04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு    விலை ரூபா 5 00

# முரசொலி

முரசு 06 ஒலி 12 பிரசோற்பத்தி கார்த்திகை 23 ; 09-12-1991 ; திங்கள்

## இராணுவத்திடம் சிக்கியவர்கள் கை, வாய் கட்டப்பட்டு விசாரணை

நேற்று முன்தினம் அதிகாலை வளலாயில் இராணுவத்தினரின் பிடிக்குள் சில வயோதிபர்கள் சிக்கிக்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் சிலரைப் பிடித்த இராணுவத்தினர் அவர்களின் வாயையும் கண்ணையும் துணியால் கட்டி நேற்று முன்தினம் முழுநாளும் தம்முடன் வைத்திருந்ததாகவும், விசாரணை செய்தபின்னர் நேற்று அதிகாலை விடுவிக்கப்பட்டதாகவும் தப்பிவந்த அவர்கள் தெரிவித்தனர். மேலும் சில வயோதிபர்களும் இராணுவத்திடம் சிக்கியுள்ளதாகவும் தெரியவருகிறது. (20)

# வலி. வடக்கில் தொடர்ந்தும் மோதல்

# இராணுவ முன்னேற்றம் தடுக்கப்பட்டது

## அச்சுவேலி நகரப்பகுதி வெறிச்சோடிகாணப்படுகிறது

அச்சுவேலி அரசினர் ஆஸ்பத்திரி நேற்று மூடப்பட்டது. இங்கிருந்து நோயாளிகள் வெளியேறியுள்ளனர்.

இதேபோல அச்சுவேலிப் பகுதிக் கடைகள், அரச அலுவலகங்கள் என்பனவும் மூடப்பட்டு அப்பகுதிசன நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்படுகிறது.

அச்சுவேலி வலிகாமம் கிழக்கு வடபகுதி ப.நோ. கூ, சங்கக் கிளைகள் சிலவும் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. (40, 06, 20)

## நவக்கிரி வடக்கு வெளியில் உக்கிரக் குண்டு வீச்சு

நேற்று நண்பகல் வரையில் அச்சுவேலி, ஈவினை, தோலகட்டி, பத்தைமேனி, நவக்கிரி வடக்கு வெளி ஆகிய பகுதிகளை நோக்கி இரு பொம்மர் தாக்குதலை நடத்தின.

25 க்கு மேற்பட்ட வீடுகள் கட்டிடங்கள் சேதமாகின.

இப் பகுதி மக்கள் தொ

## மஸ்கன்ஸ் தொழிற்சாலை குண்டுவீச்சினால் தகர்ப்பு

வளலாய் கிழக்குப் பகுதியிலும்; அச்சுவேலி வென்ஹாம் பாடசாலைக்கு அண்மையிலும் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் மீது நேற்றும் புலிகள் கடும் தாக்குதல் நடத்தி இராணுவத்தின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தினர். இதனால் இராணுவத்தினர் தொடர்ச்சியான ஷெல் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் ஏற்கனவே இடம் பெயர்ந்த பத்தைமேனி, வளலாய், இடைக்காடு மக்களுடன் அச்சுவேலி வடக்கு அச்சுவேலி தெற்குப் பகுதிகளில் உள்ள பலர் இடம் பெயர்ந்துள்ளனர்.

இதேநேரம் சுவாமினாலுக்குத் தெற்கேயுள்ள ஒட்டியப் புலமூடாக ஈவினை மஸ்கன் தொழிற்சாலைப் பக்கமாகவும் இராணுவத்தினர் முன்னேற முயன்றபோது புலிகள் கடும் தாக்குதலை அங்கு தொடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து இரண்டு பொம்மர் விமானங்கள் தொழிற்சாலை மீது குண்டுத் தாக்குதலை நேற்று மேற்கொண்டதில் தொழிற்சாலை பாரிய சேதத்துக்குள்ளானது (20, 40, 06, 07)

கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு

## அனுமதி அட்டை இல்லாத அச்சுவேலி மாணவருக்கு அனுமதி

அச்சுவேலிப் பகுதியிலி அனுமதி அட்டையை கல்விப்

காரைநகர் ப. நோ. கூ. சங்கம்

## அபாயப்படியின் முற்பணம் ஊழியர்களுக்கு கிடைக்கும்

காரைநகர் பல. நோக்குக் எதிர்க்கப்பட்டுள்ளதாகவும்

கட்டி, பத்தைமேனி, நவக்கிரி வடக்கு வெளி ஆகிய பகுதிகளை நோக்கி இரு பொம்மர் விமானங்கள் மூர்க்கத்தனமாக குண்டு வீச்சுத் தாக்... கட்டிடங்கள் சேதமாகின.

இப் பகுதி மக்கள் தொடர்ந்து வெளியேறிய படி இருந்தனர். (06, 07, 20

## அச்சுவேலிப் பகுதி அகதிகளுக்கு சமைத்த உணவு கிடைக்கும்

இடைக்காடு, வளலாய், கதிரிப்பாய், அச்சுவேலி ஆகிய பகுதிகளிலிருந்து இராணுவ நடவடிக்கையால் வெளியேறி அகதி முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு சமைத்த உணவு மூன்று நாட்களுக்கு வழங்குவதற்கு கோப்பாய் உதவி அரச அதிபர் எஸ். முருகேசபிள்ளை நடவடிக்கை எடுத்துள்ளார்.

—04 ஆம் பக்கம் பார்க்க

## கோப்பாய் உதவி அ. அ. பிரிவில் மூன்று அகதி முகாம்கள்

அச்சுவேலிப் பகுதியில் இடம்பெயர்ந்த மக்களுக்கு கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. முருகேசம்பிள்ளை மூன்று அகதி முகாம்களை அமைத்துள்ளார்.

ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம், ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியா

—04 ஆம் பக்கம் பார்க்க

## ராணுவ அதிகாரிக்கு சிறை

வளைகுடா யுத்தத்தின் போது அமெரிக்க இராணுவ இரகசியங்களை ஈராக்கிற்கு அனுப்பிய குற்றத்திற்காக அமெரிக்க இராணுவ அதிகாரிக்கு 34 வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த இராணுவ அதிகாரி ஈராக்கிற்கும், ஈரானுக்கும் பல இரகசிய தகவல்களை வெளியிட்டதாகக் கூறப்படுகிறது.

## அச்சுவேலி மாணவருக்கு அனுமதி

அச்சுவேலிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்கள் தமது க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை அனுமதி அட்டையை கல்விப் பணிப்பாளரிடமிருந்து பெறாதிருப்பினும் அவர்களைப் பரீட்சையில் இன்று தோற்ற அனுமதிக்குமாறு கல்விப் பணிப்பாளர் சகல பரீட்சை மேற்பார்வையாளருக்கும் அறிவித்துள்ளார்.

இம்மாணவர்களுக்கான

—04 ஆம் பக்கம் பார்க்க

## 3 வேங்கைகள் வீரமரணம்

நேற்று முன்தினம் பலாலி இராணுவத்தினருடன் நடைபெற்ற மோதலில் மேஜர் இளங்கோ (வ. மன்மதநாதன் கம்பூது), 2ஆம் லெப் சின்னத்தம்பி (க. சண்முகம்) ஆகிய போராளிகள் வீரமரணமடைந்தனர் நேற்றுக் காலை நடைபெற்ற மோதலில் இன்பன் (த. ஜெயசீலன் மண்டான்) வீரமரணமடைந்தார்.

## திருமலை உணவுக் களஞ்சியத்தில் 23 லட்சம் ரூபா மோசடி

திருகோணமலை உணவுக் களஞ்சியத்தில் 23 லட்சம் ரூபா மோசடி இடம்பெற்றது தொடர்பாக களஞ்சியப் பொறுப்பாளர் ஒருவரும் உ. உணவுக் கட்டுப்பாட்டதிகாரி ஒருவரும் விசாரணைக்கும் பணித்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் திருமலை நீதவான் முன்னிலை

—4 ஆம் பக்கம் பார்க்க

## காஷ்மீர் எல்லையில் கண்ணி வெடிகள்

பாகிஸ்தானுடனான காஷ்மீர் எல்லைப்பகுதியெங்கும் நிலக்கண்ணி வெடிகள் புதைத்துள்ளதாக இந்திய இராணுவம் அறிவித்தது.

நிலக்கண்ணி வெடிவைக்கப்பட்டதை வானொலி மூலம் அறிவித்த அரசு மக்களை அப்பகுதிக்குச் செல்லவேண்டாமென எச்சரித்தது.

சுய ஆட்சி கோரும் போராளிகளும் காஷ்மீர் தீவிரவாதிகளின் ஊடுருவலைத் தடுக்கவே இக்கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டதாக இந்திய இராணுவம் அறிவித்தது.

## ஊழியர்களுக்கு கிடைக்கும்

காரைநகர் பல. நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தமது ஊழியர்கள் ஒவ்வொருவருக்கும் அபாயப்படியின் முற்பணமாக ரூபா மூவாயிரம் இம்மாதம் வழங்கவுள்ளது.

தைமாதம் முதல் அபாயப்படி ஒவ்வொரு மாதச் சம்பளத்துடனும் சேர்த்து வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

இராணுவ நடவடிக்கையால் காரைநகர் ப. நோ. கூ. சங்கம் தற்போது சுழிபுரத்தில் இயங்கிவருவதும் குறிப்பிடத்தக்கது 18

---

## லலித் குழுவில் மேலும் எட்டுப்பேர்

லலித், காமினி தலைமையிலான ஐக்கிய தேசிய ஜனநாயக முன்னணியில் மேலும் எட்டுப்பேர் இன்று சேரவுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

அரசாங்க கட்சியைச் சார்ந்த முக்கிய பிரமுகர்களும் இவர்களுடன் சேருவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## குப்பிளானில் கலியர் தாக்கு

நேற்றுக் காலை குப்பிளான் முகாமிலிருந்து இடம்பெற்ற 50 கலிபர்த் தாக்குதலில் இருவர் படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பி. நாகேந்திரம் (30 குப்

—04 ஆம் பக்கம் பார்க்க

## கீரிமலையிலும் மோதல்

கீரிமலைப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரும் நேற்று முன்னேற முயன்றபோது விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்

— 04 ஆம் பக்கம் பார்க்க

ஸ்ரீமாவோ சீனா சென்றபோது

# அனுரா செயற்பட்டவிதம் குறித்து உறுப்பினர் அதிருப்தி

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா சமீபத்தில் சீனா சென்றிருந்தபோது அனுரா பண்டாரநாயக்கா நடந்து கொண்ட விதம் குறித்து கட்சி அங்கத்தவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

திருமதி பண்டாரநாயக்கா புதிய கூட்டணி ஒன்றினை உருவாக்குவதினைத் தடுக்கும் விதத்தில் அனுரா பண்டாரநாயக்கா ஏனைய எதிர்க்கட்சிகளைச் சந்தித்தது பற்றியும், கொலைச் சந்தேக நபர் ஒருவரைச் சந்திக்க அவர் போகம்பர சிறைக்குச் சென்றது பற்றியும் இப்போது கேள்வி எழுப்பப்படுகின்றது.

திருமதி பண்டாரநாயக்கா அகில இலங்கை ரீதியில் கட்சியின் நிர்வாகக் குழுவைக் கூட்டி உட்கட்சி விவகாரங்களை முன்வைக்கலாமெனக் கூறப்படுகின்றது.

சந்திரிகாவுக்கும் திருமதி பண்டாரநாயக்காவின் ஆதரவு உண்டு, அனுராவுக்கும் அவருக்கும் இடையிலேயே பிளவு நீடிக்கும் என்றும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## வறியோரின் பொருளாதார மேம்பாடு அவசியம்

''சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம் வறிய மக்களின் பொருளாதாரத்தையும், சேமிப்பையும் மேம்படுத்துவதுடன் பாடசாலைப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியிலும் அதிக அக்கறையும், ஊக்குவிப்பும் காட்டுவது முன்மாதிரியானதாகும். பாடசாலைகள் தோறும் பிள்ளைகளுக்குச் சீருடை வழங்க இச்சங்கங்கள் முன்வரவேண்டும்,''

இவ்வாறு கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் கொழும்புத்துறை கிழக்கு சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கத்தினால் மாணவிகளுக்குச் சீருடை வழங்கும் வைபவத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் வித்தியாலய அதிபர் திரு. க. தங்கராசா குறிப்பிட்டார்.

சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் க. நடராசா பேசும்பொழுது ''மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்லவும், தடையின்றிக் கல்வியைத் தொடரவும் இச்சங்கம் ஊக்கமளித்து உதவும். இதன் மூலம் கிராமம் தோறும் கல்வியை முன்னேற்ற முடியும்'' என்று கூறினார் பொருளாளர் செ. கந்தசாமி, யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவைச் செயலாளர் சி. சி. வரதராசா, ஐக்கிய நாணய சங்க யாழ் மாவட்டச் செயலாளர் செல்வி ஆர். எம். ஜே. இராஜகுமாரி உட்பட வேறு பலரும் பேசினர். (14)

## பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் குற்றவாளியாகக் காணப்பட்டார்

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் கெனத் பெக்கர் மீது நடைபெற்ற விசாரணையில் அமைச்சர் குற்றவாளியாகக் காணப்பட்டார்.

சீக்கியருக்குத் தனிநாடு கோரிப் போராடும் சரம்ஜித் சிங் என்பவரை நாடுகடத்த எடுத்த நடவடிக்கையை ஆட்சேபித்து சரம்ஜித் சிங் மேல் நீதிமன்றத்தில் முறையிட்டிருந்தார். நாடுகடத்தலை நிறுத்துமாறு மேல் நீதிமன்றம் விடுத்த கட்டளையை நிறைவேற்றத் தவறியமைக்காகவே நீதிமன்றத்தை அமைச்சர் அவமதித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டார்.

இந்தியாவிற்கு அனுப்பப்படின் தான் சித்திரவதைக்குட்படுத்தப்படலாம் என சிங் தன் மனுவில் கூறியிருந்தார்.

## குவைத் நாணயத்திற்கு மத்திய வங்கி குறைந்த வீதம் கொடுக்கிறது

வெளிநாட்டுப் பணத்தை மாற்றிக்கொடுக்கும் போது மத்திய வங்கி தன்னிச்சையாகச் செயற்பட்டு உரிய பணத்தைக் கொடுக்கத் தவறியதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

குவைத்தை ஈராக் கைப்பற்றும் போது இங்கு தப்பி வந்தவர்கள் வைத்திருந்த குவைத் நாணயத்தைச் செல்லுபடியற்றதெனக் கூறிய குவைத் வங்கி பின்பு அவற்றை ஏற்றுக்கொள்ளச் சம்மதித்தது.

இதன்பிரகாரம் குவைத் நாணயமான ஒரு டினாருக்கு இலங்கை ரூபா 110 வீதம் கொடுத்தது ஆனால் அதைப் பெற்று மத்திய வங்கியோ ஒரு டினாருக்கு ரூபா 59 வீதம் வழங்கியதாம்

## பாடசாலைச் சீருடைத் துணிகள் கிடைத்தன

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் இரண்டாம் தவணையில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பின்வரும் மாணவிகளுக்கு கொழும்புத்துறை கிழக்கு சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம் பாடசாலைச் சீருடைக்கான துணிகளை வழங்கியுள்ளது

(ஆண்டு - 1) யோ. பிரதுஷா, க. விஜயவதா, க. கங்கேஸ்வரன் (ஆண்டு - 2) இ. சுபாஷினி, சி. உஷாந்தினி மு. நித்தியா, (ஆண்டு - 3) யோ. சௌந்தி, சு. சர்மிலி, கி. ரூஷாந்தி, (ஆண்டு - 4ஏ) சி நித்தியகலா, யோ. சுவந்தி, செ நிசாந்தி. (ஆண்டு - 4பி) செ. சுதர்சினி, செ சஜிலா, த சங்கீதா, (ஆண்டு - 5) ச. சுவர்ணா, சா ம யேபி சாந்தி, க. தோலட்சுமி.(14)

## ஓசை எழுப்பாத கிளைடர் விமானம்

ஓசை எழுப்பாத, புகையைக் கக்காத புதிய கிளைடர் விமானம் ஒன்றை பினேர் என்ற பெயரில் மேற்கு ஜேர்மனியின் 'குண்டர் ரோச்செகிட்' என்பவர் தயாரித்துள்ளார். இந்த புதிய ரக கிளைடர் விமானத்தின் எடை 50 கிலோதான். சமீபத்தில் மேற்கு ஜேர்மனியின் வட பகுதியில் இந்த விமானம் வெள்ளோட்டத்திற்கு விடப்பட்ட போது 4500 அடி உயரத்தில் இது பறந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது இந்த கிளைடர் விமானத்தின் இன்னொரு விசேடம் என்னவென்றால் 25 கிலோ நிறையுள்ள பொதிகளைக் கொண்டு செல்லவும் இந்த விமானத்தில் இடவசதியுண்டு. இதன் இறக்கைகள் 12 மீற்றர்தான் நீளமுடையவை வெகுவிரைவில் விற்பனைக்கு வரவுள்ள இந்த விமானம் ஒன்றின் விலை இருபதாயிரம் மார்க்குகள் என்று நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (16)

## அச்சுவேலி தெற்கில் செஞ்சிலுவைக் கிளை

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் கோப்பாய்ப் பிரிவில் அச்சுவேலி தெற்கில் கிராம சேவையாளர் பிரிவில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கப் பகுதிக் கிளை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது,

இக்கிளையின் அலுவலகத்தை அண்மையில் நோர்வேயில் இருந்து இலங்கை வந்த செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஈவின்சி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதுவே இலங்கையின் முதலாவது பகுதிக் கிளையாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இக்கிளையின் புதவருடா நிர்வாகிகள்தெரிவு கோப்பாய் பிரிவுச் செயலாளர் இ. மயில்வாகனம் தலைமையில் நடைபெற்றபோது தலைவராகப் பேராசிரியர் என். பாலகிருஷ்ணனும், செயலாளராக தே. செல்வரத்தினமும், உப தலைவராக க. சிவசுப்பிரமணியமும், பொருளாளராக இ, சிவராசாவும் தெரிவாகினர் (6)

## சமய தீட்சை

கொழும்புத்துறை இந்து இளைஞர் மன்ற ஆதரவில் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட முப்பது பேருக்குச் சமய தீட்சை வழங்கப்பட்டது (14)

## இறந்துள்ளன

இடைக்காடு, வளலாய்ப் பகுதியில் இடம்பெற்ற விமானத் தாக்குதலால் பலருக்குச் சொந்தமான கால்நடைகளும் இறந்துள்ளன.

## தண்டனை

''அம்மா'' என்று கூப்பிடும் குரல் கேட்டு வாசித்துக் கொண்டிருந்த பேப்பரைக் கையிலெடுத்துக் கொண்டு சேற்றடிக்குப் போனார் பண்டிதர் பரமசிவம்.

சேற்றடியில் நின்றவரைக் கண்டதும் அவருக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது!

''பிச்சையெடுக்க நேரம் காலம் இல்லையா? காலங்காத்தாலை வந்திருக்கிறாய்'' சீறினார் உச்சஸ்தாயியில்

''நான் பிச்சைக்காரனில்லை ஐயா. அகதி''

அவருக்கு ஆத்திரத்தை கூடக் கிளறியது.

''எனக்கு நீ வியாக்கியானம் செய்யுறாய் இப்ப உனக்கு என்ன வேணும்''

''சரியான பனி பள்ளிக்கூட விறாந்தையில் இருக்கிறம். பழையசட்டை வேணும். பிள்ளைகள் குளிரிலே கஷ்டப்படுது''

''இது பிச்சையில்லையா? காசா தரப்போறாய்?''

அகதியின் முகம் வாடியது இப்படி இழிசொல் கேட்க வேண்டி ஏற்பட்டு விட்டதே என மனம் கலங்கியது. என்ன சொல்வதென்று தெரியாது நின்றபோது ''காலை வீணா என்னைக் கூப்பிட்டுக் குழப்பிப் போட்டாய்'' என்றார்,

''நான் உங்களைக் கூப்பிடவில்லை அம்மாவைத்தான் கூப்

## 3750 விவசாயிகளுக்கு இலவச விதை நெல்

யாழ் மாவட்டத்தில் கெயர். யு எஸ்.எயிட் விவசாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் காலபோக நெற்செய்கைக்காக 3750 விவசாயிகளுக்கு விதை நெல் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த விதை நெல்லை அண்மையில் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது (13)

## பாவனையாளர் பாதுகாப்புச் சங்கச் சேவை அவசியம்

## பாரிய மோசடி அம்பலத்துக்கு வந்தது

இலங்கை அகதிகள் என்று கூறப்படுவோரை மேற்குலக நாடுகளுக்குக் கடத்திச்செல்ல சுகிக்கைப்பட்டு வந்தபாரிய மோசடி நடவடிக்கைகளை சுவிஸ்பொலிஸ் அம்பலப்படுத்தி உள்ளது.

இவ் அகதிகளைக் கடத்துவதற்கு வசதியாக சிங்கப்பூர் பாஸ்போட்டுகளும் பிரிட்டிஷ் ஜேர்மன் விசாக்களும் தயாரிக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

சிறுவிளம்பரம்

வேண்டி ஏற்பட்டு விட்டதே என மனம் கலங்கியது. என்ன சொல்வதென்று தெரியாது நின்ற போது "காலை வீணா என்னைக் கூப்பிட்டுக் குழப்பிப் போட்டாய்" என்றார்,

"நான் உங்களைக் கூப்பிடலை, அம்மாவைத்தான் கூப்பிட்டேன்." பழையசட்டை தாறண்டு சொன்னா

"அம்மா என்ன அம்மா? உரிமை கொண்டாடுறாய்" சத்தம் போட்டுக் கத்தினார்.

கேற்றடியில் நடக்கும் ஆரவாரம் கேட்டு குசினியில் இருந்த பார்வதி ஓடிவந்தாள்.

முதல் நாள் வந்து பழையசட்டை கேட்டவனைக் கண்டதும் தயாராக வைத்திருந்த சட்டைப் பார்சலைக் கொண்டு வந்தாள்.

அதைக் கண்ட பண்டிதர் துள்ளிக்குதித்தார். "ஒன்றும் குடுக்கப்படாது. கொண்டுபோ" என்று கத்தினார்.

"இண்டைக்கு ஒன்பது மணிக்கு கிளினிக் பேப்பரோட மினைக்கெடுகிறியள்" என்றவாறு உள்ளுக்குப் போனாள்

"ஒன்பது மணிக்குப் பிறகு வா" என்று சொல்லாமல் சொல்கிறாள் என்பதைப் புரிந்து கொண்ட அகதி மெல்ல நழுவினான்.

பத்து மணியளவில் மீண்டும் வந்தான். சட்டைப் பார்சலோடு உணவுப் பார்சலையும் கொடுத்த பார்வதி "காலை நடந்ததை மனசிலே வெச்சிருக்காதை. அவர் சுபாவம் அப்படி" என்று கேட்டுக் கொண்டாள்.

பகல் பன்னிரண்டு மணியாகியும் பண்டிதர் வரவில்லை. கவலையுடன் காத்திருந்தாள் பார்வதி.

ஒரு மணியளவில் நடந்து வந்தார். "எங்கேயப்பா சைக்கிள். காற்றுப் போயிட்டுதா?"

"காற்றுப் போகேல்லை. சயிக்கிளை போங்கு கடைக்கு முன்னுக்கு வைச்சிட்டு எட்டி ரவ்வை இருக்கா என்று கேட்டுத் திரும்பினால் சைக்கிள் இல்லை. யாரோ அடிச்சிட்டான்"

"பழைய சட்டைக்குக் காலமை என்ன குதிகுதித்தியள். இது உங்களுக்கு நல்ல தண்டனை" என்றாள்.

முதல் முறையாக அவர் எதிர் வார்த்தை பேசாது மௌனமாக இருந்தார்.

அஜர்ணா

விதை நெல் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த விதை நெல்லை பெற்ற விவசாயிகளுக்கு கெயர் நிறுவனம் விவசாய திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ரீதியாக கருத்தரங்குகளை நடாத்தி வருகின்றன.

யாழ் மாவட்டத்திலுள்ள சங்கானை, பண்டத்தரிப்பு, அளவெட்டி, கைதடி, கொடிகாமம், சாவகச்சேரி, கட்டைவேலி, உடுப்பிட்டி, மானிப்பாய் ஆகிய ஒன்பது ப.நோ.கூ. சங்க பிரதேசங்களில் விவசாயிகளுக்கு இக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு வருவதாகவும், விவசாயிகளுக்கு தொழில் நுட்ப அறிவை ஊட்டி பயிர்ப் பாதுகாப்பு, உரமிடுதல், கிருமிநாசினி தெளித்தல் போன்ற விடயங்களில் அறிவைப் பெருக்கி அதன் மூலம் நெல் உற்பத்தியை அதிகரிப்பதே கெயர் நிறுவனத்தின் குறிக்கோள் என்று இதன் விவசாயத் திட்ட உயர் அதிகாரி ஒருவர் முரசொலிக்கு இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் விதை நெல்லைப் பெற்ற விவசாயிகளுக்கு மண்வெட்டிகளும்

## [...] பாதுகாப்புச் சங்கச் சேவை அவசியம்

"இன்றைய சூழ்நிலையில் பொதுமக்களின் தேவைகளை நன்கறிந்து உதவி புரிவது ஒவ்வொருவரதும் கடமையாகும். இக்கால கட்டத்தில் பாவனையாளர் பாதுகாப்புச் சங்கத்தினரின் சேவை இன்றியமையாதது. பொதுமக்கள் இலகுவான முறையில் தமக்குத் தேவையான பொருள்களைப் பெறுவதற்கு நீங்கள் எல்லோரும் உதவுவீர்களென நான் நம்புகின்றேன்."

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவு பாவனையாளர் பாதுகாப்புக் குழுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த உதவி அரசாங்க அதிபர் செல்வி ருபினி கனகரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

இக்கூட்டம் சங்கானை உ. அ. அதிபர் பணிமனையில் நடைபெற்றது. (18)

## அனுமதி

மன்னார்ப்பகுதி மீனவர்கள் தென்கடலில் மீன் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கொழும்பு நாளிதழ் ஒன்று நேற்றுத் தெரிவித்தது

## மேலும் எட்டுப்பேர் சேரவுள்ளனர்

ஐ.தே.க. அதிருப்தியாளர் குழுவில் மேலும் எட்டுப் பேர் சேரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் ஹெட்டன் சமரசிங்கவும் இவர்களில் அடங்குவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.


## சிறுவிளம்பரம்

**நூல்**

"அடுப்பில்லாச் சமையல் செய்முறைக் குறிப்பு" என்ற நூலை இலவசமாக பெற்றுக் கொள்ள ரூபா 2/- பெறுமதியான அஞ்சல் முத்திரை அனுப்பி வைக்கவும். 'மிக்கவைற்' த பெ இல 77, யாழ்ப்பாணம். 12029



யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## வரவு செலவுத் திட்டம் - 1992

1992 ஆம் ஆண்டிற்குக் கிடைக்கக்கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும், உத்தேச செலவின விபரங்களையும் உள்ளடக்கிய யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் வரவு செலவுத்திட்டம் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் ஏழு நாட்களுக்கு யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகராட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252) (212) (பி) பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்,

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
04. 12. 91.

12027

# தைப்பொங்கலை முன்னிட்டு அரசு போர் நிறுத்தம் அறிவிக்குமா?

## இப்போதே கூற முடியாதுஎன்கிறார் தொண்டமான்

தைப்பொங்கலை முன்னிட்டு வட, கிழக்கில் அரசாங்கம் யுத்த நிறுத்தத்தைப் பிரகடனம் செய்யுமா என்பது பற்றி இப்போதே கூறமுடியாது என்று அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் தெரிவித்தார்

எனது யாழ் விஜயத்துக்கான ஒழுங்குகளை சர்வதேசச் செஞ்சிலுவைச்சங்கமே செய்யவேண்டும். புலிகளுடன் பேச முன் அதற்கான அடிப்படையை அமைத்துக்கொள்ள அரசாங்கத்துடனும் எதிர்க்கட்சிகளுடனும் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி வருகிறேன் என்றும் அவர் நேற்று முன்தினம் கூறினார்.

எனது யாழ் விஜயத்துக்கான ஒழுங்குகளைச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் செய்வதற்கும் குறைந்தது பத்து நாட்களாவது தேவை அதனால் 10 ஆம் திகதி நான் செல்ல முடியாது என்றும் அவர் கூறினார்.

## நீர்வளத்தையும்சூழலையும் பேணுதற்கான கருத்தரங்கு

நீர்வளங்களையும், சூழலையும் பேணுதல் தொடர்பான கலந்துரையாடலொன்றுசமீபத்தில் பேராசிரியர் வ.க. கிணைசலிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக் கலந்துரையாடலை தமிழீழ ஆய்வு நிறுவனத்தினர் ஒழுங்கு செய்திருந்தனர்.

நிலத்தடி நீரைப் பாதுகாத்தல் மழை நீர் வெளியேற்றத்தை தடுத்தல், சூழலைப் பேணுதல் தொடர்பான கருத்துக்கள் துறைசார் வல்லுநர்கள் சிலரால் முன்வைக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டது.

மேலும் சில விடயங்களை விரிவாக ஆராயும் பொருட்டு எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை இரண்டாம் கட்ட கலந்துரையாடல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது

## வைத்திய உபகரணங்கள் பெறுவதற்கு நடவடிக்கை

யாழ் மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலுமுள்ள அரசாங்க வைத்தியசாலைகளுக்கு எதிர்வரும் 1992 ஆம் ஆண்டிற்குத் தேவையான வைத்திய உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு யாழ் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றார்.

தமது பிரிவிலுள்ள வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகள் தத்தமது வைத்தியசாலைகளில் பயன்படுத்துவதற்குத் தேவையான வைத்திய உபகரணங்கள் பற்றிய பட்டியலைத் தயாரித்துத் தமது அலுவலகத்திற்கு இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு இவ்வாரம் அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கை ஒன்றின் மூலம் யாழ் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (13)

## மனிதனுக்கு உதவும்பன்றிகள்

இருதயமாற்று அறுவைச் சிகிச்சையில் பன்றிகளின் இருதய வால்வுகளை மனிதருக்குப் பொருத்துவதற்கான புதிய தொழில் நுட்பத்தை தமிழக கால்நடை மருத்துவ விஞ்ஞானப் பல்கலைக்கழகம் கண்டுபிடித்துள்ளது.

இந்த நவீன மருத்துவத் தொழில் நுட்பத் திட்டத்திற்கு இந்திய மருத்துவ ஆராய்ச்சிக்கழகம் நிதியுதவி அளிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப்புதிய கண்டுபிடிப்பை அடுத்து தற்போது இருதய மாற்று அறுவைச் சிகிச்சைக்குச் செலவிடப்படும் 25,000 ரூபா 5 ஆயிரமாகக் குறையும் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

## தமிழக காவல்துறைக்கு ரூபா 10 கோடி ஒதுக்கீடு

# சிறிய செய்திகள்

## கட்டுரைப் போட்டி

சிறுவர் உரிமைச் சாசனம் பற்றிய கட்டுரைப் போட்டி நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவ, மாணவிகளுக்கிடையே நடாத்தப்படவுள்ளது. இலங்கை ஹெல்பஜா (சிறுவர் பாதுகாப்பு நிதியம்) ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (யுனிசெப்) ஆகியவற்றுடன் இணைந்து கல்வி உயர் கல்வி அமைச்சு இக் கட்டுரைப் போட்டியை நடாத்துகின்றது

ஆசிரியர்களுக் கிடையேயும் மாணவ மாணவிகளுக்கும் இடையே சிறுவர் உரிமைச் சாசனம் பற்றிய அறிவைப் பரப்புவதும், அதனைச் சிறந்த முறையில் நடைமுறைப் படுத்துவதில் ஊக்கமளிப்பதுமே இக் கட்டுரைப் போட்டியின் நோக்கமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் இக் கட்டுரைப் போட்டிக்கான முடிவு திகதி எதிர்வரும் 10-ம் திகதியாகும். மூன்று பிரிவுகளாக நடாத்தப்படும் இக் கட்டுரைப் போட்டியில் ஆறுதல் பரிசுகள் உட்பட முப்பதினாயிரம் ரூபா பணப் பரிசுகள் வழங்கப்படவுள்ளன. (14)

## வருடாந்த பொதுக் கூட்டம்

யாழ் மாவட்ட சரபந்தாட்டச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 15.12.91 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு, யாழ் சம்பத்திரிசியார் கல்லூரியில், சரபந்தாட்ட சங்கத்தலைவர் திரு. கே. குணரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழகங்கள் ஒவ்வொன்றிலும் இருந்து இரண்டு பிரதிநிதிகள் மாத்திரம் அனுமதிக்கப்படுவர் என்றும், புதிதாக அங்கத்தவராக சேர விரும்பும் கழகங்கள் செயலாளருடன் தொடர்பு கொண்டு சேர்ந்து கொள்ளலாம் என்றும், பிரேரணைகள் இருப்பின் இம்மாதம் 14 ஆம் திகதிக்கு முன்பதாக செயலாளருக்கு சமர்பிக்கப்படவேண்டும் என்றும் சங்கச் செயலாளர் திரு வே. ஏகாம்பரம் தெரிவித்துள்ளார்.

## தவறிய பணம்

காங்கேசன்துறை வீதியில் கடந்த இரண்டாம் திகதி பிற்பகல் தெல்லிப்பழைக்கும் மல்லாகத்திற்குமிடையில் தவறிப்பட்ட தொகைப் பணம், மகாஜனாக் கல்லூரி மாணவனால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தொலைத்தவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அதிபரிடம் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது

## குருபூஜை

திருவாசகம் ஸ்ரீமத்சபாரத்தினம் சுவாமிகளின் 4-வது

அரசியல் அவதானிப்புகள்:

## இனப்பிரச்சினை இணக்கத்திற்கு சிங்கள இனவாதத்தின் இடைஞ்சல்

எஸ். ஜி. எம்.

வீடமைப்பு கைத்தொழில் அமைச்சரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் வடக்கு - கிழக்கு இனப்பிரச்சினைக்கு சுமுகமான அரசியல் தீர்வைக் காண்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றார். அது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு கொண்டும் வருகிறார். இவ்விடயம் தொடர்பாக நேரடியாகப் பேசுவதுதான் பலன் தருவதாக இருக்கும் எனவும் அமைச்சரை டிசம்பர் 10 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருமாறும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு கோ. மகேந்திரராசா கோரியிருந்தார்.

இந்தப் பின்னணியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற வாராந்த பத்திரிகை நிருபர்கள் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் ரணில்விக்ரமசிங்க தொண்டமான் அவர்களின் முயற்சியை எதிர்த்தெறிந்து பேசியிருப்பது அரசின் யுத்த முனைப்பு நிலையில் கோடிகாட்டுவதாக அமைகிறது. தைபிறந்தால் வழிபிறக்கும் என்று தொண்டமான் கூறியிருக்கிறாரே எனக் கேட்டதற்கு அது பற்றி தொண்டமானிடம் தான் கேட்கவேண்டும் என்று கூறிய அமைச்சர் அமைச்சரவை இம்முயற்சிபற்றி பரிசீலிக்கவே இல்லை என்று அடித்துக் கூறியுள்ளார். அதுமட்டுமல்ல அரசின் நிலையில் மாற்றமில்லையென்றும் கூறியுள்ளார்.

பிரதமர் விஜயதுங்கவும், பாராளுமன்றத்தில் பேசும் போது யுத்தத்தை வெற்றிகொண்ட பின்புதான் அரசு அரசியல் தீர்வு பற்றி சிந்திக்கும் என்றும் கூறியுள்ளார். இராணுவத் தீர்வை நாடி நிற்கும் அரசு அதன்பின் யாருடன் அரசியல் தீர்வு காணப்போகிறது என்பது புரியாத புதிராகும்.

அமைச்சர் தொண்டமான் விடுதலைப்புலிகளுடன் தாம் நடாத்திவரும் கடிதத் தொடர்புகள் சம்பந்தமாக ஜனாதிபதி பிரேமதாசாவை அடிக்கடி சந்தித்து விளக்கி வருவதாக தெரிவித்துள்ளார். மேலும் பல அமைச்சர்கள் தம்முடன் தனியாகப் பேசும்போது இந்த இரத்தக் களரி நிறுத்தப்பட வேண்டும் எனக் கூறியதாக அமைச்சர் தொண்டமானே தெரிவித்திருக்கிறார்.

அப்படியிருக்க அமைச்சரவை இவ்விடயத்தை ஏன் பரிசீலனைக்கு எடுக்கவில்லை என்ற கேள்வி எழுகிறது. அரசு முழு விசுவாசத்துடன் இவ்விடயத்தை அணுகவில்லையென்பதுதான் வெளிப்படையாகிறது.

உண்மையில் சர்வகட்சி மாநாடு பாராளுமன்றத் தெரிவுக்குழு ஆகியவற்றிலேதான் கவனத்தைச் செலுத்த அரசு முயல்கிறது என்பதும் தெளிவு. எதிர்க்கட்சிகளை வளைத்துப் பிடித்துக் கொண்டே எந்தத்தீர்வையும் காணவேண்டுமெனவும் அதன் மூலம் அரசியல் ரீதியாக தாம் தப்பிவிட வேண்டுமெனவும் அரசு விரும்புகிறது.

தொண்டமான் அவர்கள் அனுரா பண்டாரநாயகாவுடனும் ஏனைய கட்சி முக்கியஸ்தர்களுடனும் பேச்சு நடாத்தியுள்ளார். தமது முயற்சிகள் பற்றி விளக்கியுள்ளார்.

ஆனால் எதிர்க்கட்சியினர் திரு. தொண்டமானை தமிழர் என்றரீதியில் கண்ணோட்டம் செலுத்தி இனவாத ரீதியாக கடுமையாக பாராளுமன்றத்தில் விமர்சித்துள்ளனர்.

இந்தக் கண்ணோட்டத்தை பிரதமர் விஜேதுங்கவும் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் மறுத்துப் பேசியுள்ளனர். அப்படிப் பேசும்போது கூட விடுதலைப்புலிகளை பேச்சுவார்த்தைக்குக் கொண்டுவர யாரும் பேசலாம். ஆகவே தொண்டமானும் பேசலாம் என்றும் அமைச்சர் தொண்டமான் முன்பு ஜே. வி. பியுடனும் பேசியவர். அப்போது யாரும் அது பற்றி எதிர்ப்புத் தெரிவிக்கவில்லையென்றும் கூறியுள்ளனர்.

## ரூபா 10 கோடி ஒதுக்கீடு

தமிழகத்தில் காவல் துறையை நவீனமயப் படுத்துவதற்காக இவ்வருடம் பத்துக் கோடி ரூபாவை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது.

மத்திய சட்ட, நீதித்துறை அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்களம் இத்தகவலை வெளியிட்டார்.

## ரேடியோ அவுஸ்திரேலியா ஐம்பது வருட நிறைவு

உலகின் ஐந்து கண்டங்களிலும் வசிக்கும் 5 கோடிக்கு மேற்பட்ட நேயர்களுக்கு நன்கு அறிமுகமான பெயர் ரேடியோ அவுஸ்திரேலியா இதன் மெல்போன் நிலையத்தில் மட்டும் 220 ஊழியர்கள் பணிபுரிகின்றனர். 18ஸருடியோக்கள் உள்ள அவுஸ்திரேலியா கோலின் என்ற பெயருடன் தனது சேவையைத் தொடங்கிய ரேடியோ அவுஸ்திரேலியா 29-12-1991ல் தனது 50ஆவது வருட நினைவு தினத்தை வெகு விமரிசையாகக் கொண்டாட ஆயத்தங்களை செய்து வருகிறது. வாரத்தில் 150 மணி நேரத்திற்கும் மேலாக வெவ்வேறு நிகழ்ச்சிகளைத் தற்போது வழங்கிவரும் இந்நிலையம் ஒன்பது மொழிகளில் தினமும் ஒலிபரப்புச் செய்கின்றது. மேலும் பசிப்நாடுகள், பாபுவே, நியூகினி, இந்தோனேசியா, சீனா மலேசியா, சிங்கப்பூர், பங்களாதேஷ், இலங்கை, பாகிஸ்தான், தாய்லாந்து பிலிப்பைன்ஸ், வியட்நாம், மயான்மார், இந்தியா ஆகிய நாடுகளுக்கு முன்னுரிமை கொடுத்து நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறது.. ரேடியோ அவுஸ்திரேலியாவிற்கு ஆசிய நாடுகளில் தான் அதிக அளவு நேயர்கள் இருப்பதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு காட்டுகிறது என்று கூறப்படுகிறது. (16)

திருவாசகம் ஸ்ரீமத் சுவாமி ரத்தினம் சுவாமிகளின் 4-வது ஆண்டு நிறைவு குருபூஜை எதிர்வரும் 13 ஆம் திகதி மறவன்புலவு சுவாமிகளின் நினைவாலயத்தில் கொண்டாடப்படவுள்ளது. திருவாசகம், பாராயணம், கூட்டுப் பிரார்த்தனை, அபிஷேகம் பூஜை ஆகியன இடம்பெறவுள்ளன (14)

## எய்ட்ஸ் பற்றிய கருத்தரங்குகள்

''எய்ட்ஸ்'' நோய்த் தடுப்பு வாரத்தை முன்னிட்டு யாழ் மாவட்டத்திலுள்ள சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் ''எய்ட்ஸ்'' நோய் பற்றிய கருத்தரங்குகள் தற்போது நடாத்தப் பட்டுவருகின்றன

இப் பிரிவுகளில் கடமையாற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர்களும் மற்றும் சுகாதார தரிசிப்பாளர்களும் தத்தமது பிரிவுகளில் சுகாதார தொண்டர்களின் ஒத்துழைப்புடன் எய்ட்ஸ் நோய் பற்றிய கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து நடாத்தி வருகின்றனர். யாழ் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (13)

... எனத் தெரிவிக்கப்படுகின்றது

## இறால் வளர்ப்பு கருத்தரங்கு

நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 00மணிக்கு யாழ்பல்கலைக்கழக வெளதிக பீட 1பி மண்டபத்தில் உயிரியல் பிரிவு சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் கே. சித்திரவடிவேலு அவர்கள் இறால் வளர்ப்பின் பிரச்சினைகளும், முன்னேற்றங்களும் என்னும் தலைப்பில் உரையாற்ற உள்ளார் இக்கருத்தரங்கில் சகலரையும் கலந்துகொள்ளுமாறு தமிழீழ ஆய்வு நிறுவனம் அழைத்துள்ளது.

## துரிதம்

யாழ் மாவட்ட காணிப் பதிவகம் பதிவு செய்யப்பட்ட காணிகளின் உறுதிப் பிரதிகளை வழங்குவதில் துரிதம் காட்டி வருகின்றது.

1940 ஆம் ஆண்டிற்குப் பின் பதிவு செய்யப்பட்ட காணிகளின் உறுதிப் பிரதிகள் தேவையானோர் யாழ் விடமைப்புச் செயலகத்தில் இயங்கும் யாழ் மாவட்டக் காணிப் பதிவகத்தில் விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளனர், (1

... ஜே. வி. பி.யுடனும் பேசியவர், அப்போது யாரும் அது பற்றி எதிர்ப்புத் தெரிவிக்கவில்லையென்றும் கூறியுள்ளனர்.

இதிலிருந்து சிங்கள இனவாத எதிர்க்கட்சிகள் எந்த அளவுக்கு சமாதான முயற்சிக்கு எதிராகப் பேசுகின்றன, செயற்படுகின்றன என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

தொண்டமான் மிகவும் சிரேஷ்ட அரசியல்வாதி, சிரேஷ்ட அமைச்சர் எல்லாவற்றிற்கும் மேலாக தமிழர் என்ற ரீதியில் இதயசுத்தியுடன் செயற்பட்டாலும் கூட அரசும் எதிர்க்கட்சிகளும் அவரின் காலை வார முயல்வது வெளிப்படையாகத் தெரிகிறது. இந்தக் காலை வாரல் நடவடிக்கையின் ஒரு கட்டமாகவே தொண்டமானின் யாழ்ப்பாண விஜயம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும்,

இத்தனை தடைகளையும் தாண்டித்தான் தொண்டமானின் முயற்சி கைகூடுகின் கூட வேண்டும். இதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

ஸ்ரீமாவோ சொல்கிறார்

## கட்சியின் யாப்பு அனுராவிலும் பார்க்க எனக்குத் தெரியும்

சுதந்திரக் கட்சியின் அரசியல் யாப்பும், அதன் சகல ஷரத்துக்களும் எனக்குக் கூடுதலாகத் தெரியும். இவ்வாறு ஸ்ரீமாவோ தனது மகன் அனுரா பண்டாரநாயக்காவிற்குக் கூறினார்.

'எனது மகள் சந்திரிகாவை கட்சிக்குள் அனுமதித்ததன் மூலம் எந்தவித விதியையும் நாம் மீறவில்லை இவ்வாறு மேலும் கூறினார்.

# மட்டக்களப்பில் கிராமங்கள் மீது படையினர் கடும் தாக்குதல்

மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனை முகாமிலிருந்து வந்த படையினரால் நேற்று முன்தினம் பளையடிசேனை என்ற கிராமம் சுற்றிவளைக்கப்பட்டு 100 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் இரு ஆண்களும் மூன்று மாணவிகளும் தொடர்ந்து முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை 19-ம் கட்டை இராணுவ முகாம் படையினர் பல கிராமங்களை சுற்றிவளைத்து தேடுதல் நடாத்தினர் இதன்போது சுமார் 75 வீடுகள் படையினரால் தீக்கிரையாக்கப்பட்டன.

இக்கிராமங்கள் மீது ஹெலிகப்டரில் இருந்தும் துப்பாக்கிச்சூடு, ரொக்கட் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. சுமார் இரு மணி நேரம் ஹெலித் தாக்குதல் நடைபெற்றது.

இதே 19 ஆம் கட்டை முகாமிலிருந்து இப்பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதலும் நடைபெற்றது.

## தமிழ்ப் பகுதிகளுக்கு உழவுயந்திரங்கள் இல்லை

திருகோணமலை, அம்பாறை, வவுனியா உட்பட்ட 15 மாவட்டங்களில் உள்ள 121 கமநலச் சேவை நிலையங்களுக்கு 46 நாலு சில்லு உழவுயந்திரங்களும், 90 இரு சக்கர உழவுயந்திரங்களும் இறக்குமதி செய்யப்பட்டன. ஜப்பான் அரசின் உதவியுடன் இவை தருவிக்கப்பட்டன.

கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு இவை கிடைக்காது எனவும் தெரிவிக்கப்படுகிறது. 06

## தொண்டர் ஆசிரியர் நியமனம்
## தாமதத்திற்குக் காரணம் தவறான விவரங்கள்

''நாட்டின் எப்பகுதியிலும் தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தரமாக நியமிக்கப்படவில்லை'' இவ்வாறு கல்விச் சேவை ஆணைக்குழுத்தலைவர் ஜோர்ஜ்மென்டிஸ் தெரிவித்தார்.

''சிலபகுதிகளில் இவர்கள் நியமிக்கப்பட்டதாகக் கூறப்படுவது தவறு இந்தநியமனங்களைச் செய்வதற்குத் தாமதம் ஏற்படுவதற்குக்காரணம் தவறான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டமையே'' என திரு. மென்டிஸ் மேலும் கூறினார்.

இவ்விடயம் பற்றி அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்'' தொண்டர் ஆசிரியர்கள் பலர் தவறான சேவை விவரங்களைச் சமர்ப்பித்துள்ளதாகவும், பாடசாலை அதிபர்களும் பிழையான விவரங்களை அனுப்பியுள்ளதாகவும் இவையாவும் இப்போது பகிரங்கமாக விசாரிக்கப்படுகின்றன என்றும் இந்த நியமனங்கள் வடக்கு தெற்கு என்ற பாகுபாடு இன்றி தேசியமட்டத்தில் செய்யப்படும்'' எனச் சொன்னார்.

## கொழும்பு நீதிபதிக்கெதிராக உயர் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு

''கொழும்பு மாவட்ட நீதிபதிக்கு எதிராக வாதிகள் லலித்அத்துலத்முதலி குழுவினரின் சட்டத்தரணிகள் தங்கள் மனுவில் குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் இந்த மனுவுக்கு எவ்விதத்திலும் தொடர்பு அற்றவை''

இவ்வாறு உயர் நீதிமன்ற நீதிபதி அதிருப்தியாளர்களின் வழக்கில் தீர்ப்பு வழங்கும் போது குறிப்பிட்டார்.

''கொழும்புமாவட்டநீதிபதி இந்த வழக்கை பிரதிவாதியாகச் சேர்க்கப்படாத பட்சத்தில் அவரைப் பற்றிய குற்றச்சாட்டுகள் மனுவில் இருந்து நீக்கப்படவேண்டும்'' என மேலும் குறிப்பிட்டார்.

அதிருப்தியாளர் குழுவினர் கட்சியிலிருந்து வெளியேற்றப்படலாம் என அஞ்சி 5 9, 91இல் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தடை உத்தரவுக்கு மனுப்பண்ணியிருந்தனர் அந்தத் தடை உத்தரவு மாவட்ட நீதிபதியினால் நிராகரிக்கப்பட்டது 5.9.91இல் இவர்கள் ஐ தே கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டனர்,

கொழும்பு மாவட்ட நீதிபதி தங்கள் மனுவை நிராகரித்ததைச் சுட்டிக்காட்டியேஉயர் நீதி மன்றத்தில் அவருக்கெதிராகக் குற்றம் சுமத்தப்பட்டது.

எனினும் மாவட்ட நீதிபதிக்கெதிராகச் சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகள் மன்றில் வாபஸ் பெறப்பட்டன.

## அச்சுவேலிப் பகுதி மாணவருக்கு புதிய பரீட்சை மண்டபங்கள்

அச்சுவேலிப்பகுதி பாடசாலைகளில் க பொ. த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவிருந்த பரீட்சார்த்திகளுக்கு வேறு பாடசாலைகளில் பரீட்சை மண்டபங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அவற்றின் விவரம் வருமாறு: அச்சுவேலி மகாவித்தியாலய மண்டபம் 1-புத்தூர் ஞானம் அக்கடமி, அச்சுவேலி ம.வி. மண்டப இல. 2 - நீர்வேலி றோ. க. த க. பாடசாலை, அச்சுவேலி ம. வி. மண்டபம் 3-வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம், அச்சுவேலி மகாவித்தியாலய மண்டபம் 4-கோப்பாய் சரவணபவானந்தன் வித்தியாலயம்.

அச்சுவேலி சென் திரேசா பாடசாலை- ஆவரங்கால் குகன் கல்வி நிலையம், இடைக்காடு ம வி.மண்டபஇல 1 - நீர்வேலி கரந்தன்இராமுப்பிள்ளை வித்தியாலயம், இடைக்காடு ம. வித்தியாலயம் மண்டபம் 2 - அச்செழு சைவப்பிரகாசவித்தியாலயம்

(20, 06, 43)

கோப்பாய்... லயம், புத்தர் கலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே அகதி முகாம்களாக அமைக்கப்பட்டுள்ளன.

## ஹெலி நோட்டம்

வலிகாமம் வடக்குப் பகுதியில் உள்ள கீரிமலை, தெல்லிப்பழை, அளவெட்டி ஆகிய பகுதிகளில் ஹெலிகொப்டர்கள் நேற்று வட்டமிட்டன.

(06, 20)

## நஷ்டஈடு

கூட்டுப்படைத் தலைமையகத்தின் முன்நிகழ்ந்த குண்டு வெடிப்பில் மரணமானோருக்கும் காயமடைந்தோருக்கும்

## சடலம் மீட்பு

வளலாய்ப்பகுதியில் இராணுவம் நேற்று முன் தினம் வந்தபோது இடைக்காட்டில் அதிகாலையில் இறந்தவர் ஒருவரது சடலத்தை வீட்டுக்காரர் அறையுள் வைத்துப் பூட்டிவிட்டு வெளியேறினர்,

நேற்று அவ்வுடல் விடுதலைப்புலிகளின் உதவியுடன் மீட்கப்பட்டு ஆவரங்காலில் அடக்கம் செய்யப்பட்டது,

(20 40)

## புதன், ஞாயிறு மூடப்படும்

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல சிகை அலங்கரிப்பாளர் நிலையங்களையும் புதன், ஞாயிறு ஆகிய நாட்களில் பூட்டுமாறு வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாசம் வேண்டுகோள் விடுத்துள்ளது,

சமாசச் செயலாளர் திரு சு ஆனந்தர் மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளார் (18)

## சுகாதாரச் சீர்கேடு

நவாலி புலவர் அகதி முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளில் தற்போது துர்நாற்றம் வீசி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது

இப்பகுதிகளில் உள்ள வீதி ஓரங்களில் சுகாதார சீர்கேடு இருப்பதால் இப்பகுதி அசுத்தமுற்ற ஒரு பகுதியாக மாற்றமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இதனால் தொற்றுநோய்கள் பரவி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது (18)

குப்பிளானில்... பிள்ளைகள் தெற்கு, சே. யோகராணி (24) குப்பிளான் தெற்கு ஆகியோரே காயப்பட்டவர்களாவர், 07

## பண்டத்தரிப்புக் கோட்டத்தில் புதிய பரீட்சை மண்டபங்கள்

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பிரிவில் அமைக்கப்பட்ட க பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்குரிய மண்டபங்கள் சில இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

முன்னர் பரீட்சை மண்டபமாக அமைக்கப்பட்டு தற்போது மாற்றப்பட்டுள்ள விவரங்கள் பின்வருமாறு:-

1990 புதியபாடத்திட்டம்

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டப இல. 5- பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ. க. த க பா, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி 6-சில்லாலை றோ. க த. க. பா, இளவாலை கன்னியர்மடம் ம.வி. 4-இளவாலை புனித ஹென்றியரசர் வித்தியாலயம், யாழ்ப்பாணக் கல்லூரி 4- அராலி இந்துக் கல்லூரி 1, யாழ்ப்பாணக் கல்லூரி 5 - அராலி இந்துக்கல்லூரி 2, யாழ்ப்பாணக் கல்லூரி 6- அராலி சரஸ்வதி ம வி, வட்டு இந்துக்கல்லூரி 6- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், வட்டு இந்துக்கல்லூரி 7- வட்டு. திருஞானசம்பந்த வித்தியாலயம், வட்டு. இந்துக்கல்லூரி 8- வட்டு திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி 7- தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயம், மல்லாகம் மகா வித்தியாலயம் 4- மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம், ஏழாலை மகா வித்தியாலயம் 2-கொட்டைக்காடு அ. த. க. பா, மகாஜனாக் கல்லூரி 6- தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலயம்.

1991புதிய பாடத்திட்டம்

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி 3- மாதகல் சென்ஜோசப் மகாவித்தியாலயம், இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம் 2- இளவாலை சென் ஹென்றி மகா வித்தியாலயம், வட்டு இந்துக் கல்லூரி 4- சித்தன்கேணி கணேச வித்தியாலயம், வட்டு. இந்துக்கல்லூரி- 3 சங்கானை சிவப்பிரகாசம.வி சுழிபுரம் விக்ரோறியா 3-மூளாய் சைவப்பிரகாச மகா வித்தியாலயம் 1 சுழிபுரம் விக்ரோறியா 4-மூளாய் சைவப்பிரகாச மகாவித்தியாலம்2.

(18)

## பரீட்சை நிலையங்களில் தளபாட வசதிகள் இல்லை

யாழ் மாவட்டத்தில் உள்ள பல க, பொ, த பரீட்சை நிலையங்களில் போதிய தளபாட வசதிகள் இல்லாததால் இந்தப்பரீட்சை நிலையங்கள் வேறு பாடசாலைகளுக்கு திடீரென மாற்றியமைக்கப்பட்டுள்ளன

இதனால் மாணவர்கள் தமக்குரிய பரீட்சை மண்டபங்களைத் தேடி அலைந்து திரிந்ததை நேற்றுக் காண முடிந்தது.

கல்விப்பகுதியினர் நேர காலத்துக்கு இந்த மாற்றங்களைச் செய்யவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. 18

## விநியோகம்

காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தமது கிளைகள் மூலம் காரைநகரைச் சேர்ந்த பாவனையாளர்களுக்குச் சவர்க்காரம் வழங்கி வருகின்றது.

## சிற்றூரவைக் கூட்டம்

## இப்போது

பாடசாலைகளே அகதி முகாம்களாக அமைக்கப்பட்டுள்ளன.

இந்த அகதி முகாம்களில் நேற்றுவரை ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் தங்கியிருந்ததைக் காண முடிந்தது. (07, 06)

## அச்சுவேலிப்..

கோப்பாய் உதவி அரச அதிபர் செயலகத்துடன் தொடர்பு கொண்டுள்ளதை யடுத்து செயலக செய் திட்டப் பணிப்பாளர் செ. பத்மநாதன் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்.

இதேநேரம் செஞ்சிலுவைச் சங்கமும் விரைவில் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இது குறித்து கோப்பாய் பிரிவு செஞ்சிலுவைக் கிளையினர் யாழ் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டுள்ளனர். (06)

## எனதுகட்சி...

வேண்டும் என அத்துலத் முதலி கூறியிருப்பது இதுவே முதற்தடவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது,

யகத்தின் முன் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் மரணமானோருக்கும் காயமடைந்தோருக்கும் நஷ்டஈடு வழங்கத் துரித நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் தயாரத்ன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்,

இக்குண்டு வெடிப்பினால் வீடுகளை இழந்தோருக்கும் வேறுவகையில் பாதிப்புற்றோருக்கும் உரிய நஷ்டஈடு வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

## திருமலை...

யில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணை அடுத்த மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## அனுமதி...

தற்காலிக அனுமதி அட்டைகளைப் பரீட்சை மேற்பார்வையாளர்களே தயாரித்து அதில் பரீட்சார்த்தியின் கையொப்பத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (20)

## சிற்றூரவைக் கூட்டம்

எதிர்வரும் செவ்வாய்க் கிழமை பி.ப.2 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் சகல சிற்றூரவைத் தலைவர்களுக்கான வழமையான மாதாந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் யாழ் மாவட்டத்தின் அனைத்து சிற்றூரவைகளின் சகல உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்

## கிளைகள் திறக்க நடவடிக்கை

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கிளை, தமது பிரிவில் ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவிலும் பகுதிக்கிளைகள் திறப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் (06)

## கீரிமலையிலும்—

கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

நேற்று அதிகாலை 6-30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது 20, 06, 07

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 09. 12. 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

**இப்போது யாழ்நகரில் முரசொலி விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன!**

484/1 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள

சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்றெட் கட்டிடத்தின்

(இலங்கை வர்த்தக வங்கி யாழ் கிளைக்கு அருகிலும்
யாழ் போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கு முன்பாகவும்)

முதலாம் மாடியில்

**முரசொலி விளம்பர கருமபீடம்**

காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை
(சனி, ஞாயிறு தவிர்ந்த நாட்களில்)

இயங்கிவருகின்றது.

A12023

பொது முகாமையாளர்
முரசொலி